# அம்ருதா விஸ்வ வித்யாபீடம் சார்பில் உலக அளவில் குவிஸ் போட்டி!

## கோவையில் 7–ந் தேதி நடக்கிறது!!

கோவை,ஜூன்.5– வேர்ல்டு க்விஸ் சாம்பியன்ஷிப் போட்டி அம்ருதா விஸ்வ வித்யாபீடம் சார்பில் அறிவுப்போட்டி, ஜூன் 7ம் தேதி, சனிக்கிழமை மதியம் 3:00 மணிக்கு அம்ருதா விஸ்வ வித்யாபீடத்தின் எட்டிமடை வளாகத்தில் நடக்கிறது. இந்த போட்டி உலகளவில் 100–க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறும்.

இந்தியாவில் இந்த ஆண்டு பத்து அதிகாரப்பூர்வ மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் கோயம்புத்தூர் மட்டுமே தமிழ்நாட்டிற்கான ஒரே இடமாக உள்ளது.

மூன்று மணி நேர எழுத்துத் தேர்வானது இந்தப் போட்டியில் அடங்கும், இதில் எட்டு பல்வேறு தலைப்புகளில் 240 கேள்விகள் இடம்பெறும். அறிவியல், வரலாறு, கலாச்சாரம், நடப்பு விவகாரங்கள், பொழுதுபோக்கு, விளையாட்டு, வாழ்க்கை முறை மற்றும் ஊடகம் ஆகிய துறைகள் இவற்றுள் உள்ளடங்கும்.

இது வயது அல்லது கல்வி அடிப்படையில் இல்லமால் அனைவருக்கும் பொதுவானதாகும். 7–ந் தேதி பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை தேர்வு நடைபெறும். பதிவு கட்டணமாக ரூ.200 ஆன்லைனில் செலுத்த வேண்டும். 240 க்விஸ் கேள்விகளின் அச்சிடப்பட்ட புத்தகமாக கொடுக்கப்படும்.

பதிவு செய்வதற்கான இணைப்பு: http://amrita.link/quiz வலைத்தளம்: www.iqa.asia தகுதி: அனைவருக்கும் பொதுவானது தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 91 88482 14565 மேற்கண்ட தகவலை அம்ருதா விஸ்வ வித்யா பீடம் அறிவித்துள்ளது.

